**தலைப்பு 299 – இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜுன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை புலமைச் சொத்து அலுவலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 மே 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் பந்தி 1.6 இல் காட்டப்பட்டுள்ள விடயத்தின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- தெரிவித்துக் கொண்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது நான் மேற்கொண்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை

அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 6 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத் தேவைகளை விட்டு விலகி இருந்த சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்கள ஏடுகளின் படி வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,398,948 தொகை மற்றும் ஆளுக்குரிய சம்பளங்கள் ரூபா 42,545,229 தொகை எனினும் அவை ரூபா 4,651 மற்றும் ரூபா 38,198,632 தொகை என குறுக்குப் பதிவுகள் மூலம் அகற்றப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | உங்கள் அவதானிப்பின் படி வழிகாட்டல் இலக்கம் 06 இன் 3.1 மற்றும் 3.6 இன் பிரகாரம் குறிப்பிட்ட குறுக்குப் பதிவுகள் சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட திருத்திய காசுப்பாய்ச்சல் கூற்று இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். | வழிகாட்டல் இலக்கம் 06 இன் அறிவுரைகளின் படி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்கள புத்தகங்களின் படி முற்பணங்களை அறவீடு செய்தல் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 3,029,541 தொகை மற்றும் ரூபா 1,850,764 தொகை எனினும், அவை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் ரூபா 48,320 தொகை மற்றும் ரூபா 1,004,943 தொகை என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நிதிச் செயற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் வைப்புக்கள் பெறுவனவுகள் ரூபா 21,950 தொகை காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | நிதிப்பிரமாண இலக்கம் 208 இன் கீழ் திணைக்களம் வேறு திணைக்கள செலவு விடயங்களுக்காக மேற்கொண்டிருந்த ரூபா 205,051 தொகை மற்றும் ஏனைய திணைக்களங்கள் தமது பிரதான பேரேட்டிற்கான மேற்கொள்ளப்பட்ட ரூபா 102,138 தொகை கட்டுநிதியை சீராக்கல் கணக்கில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்திய கட்டுநிதி இணக்கக் கூற்று உரிய நடவடிக்கைக்காக இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு அவதானிப்பின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளது.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலங்கங் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரிவுகள் 01 மற்றும் 05 | ஒவ்வொரு உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் செயலாற்றுகை உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டு திணைக்களத்தில் செயற்படும் மனிதவளத்தினை திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதற்காக, மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். 2021 ஆண்டிற்காக மனிதவள அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

## 3. நல்லாளுகை

### 3.1 பொது மக்களுக்கு சேவையாற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2018 இலக்கங் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை செயற்பாடுகள் மிகவும் வினைத் திறனுடன் மேற்கொள்வதற்கு மற்றும் பொது மக்கள் நம்பிக்கையை அதிகரிப்பதற்காக பிரஜைகள் / சேவை நாடுநர் சாசனம் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்காமையால் நிறுவனத்தின் செயற்பாடுகளின் மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். முழு நிறுவனத்திலும் பிரஜைகள் மற்றும் சேவை பெறுவோர் சாசனத்தை நிறுவுவதற்காக நிறுவனத்தில் 2021 செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்டுத்தப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக இருக்க வேண்டும். |

### 3.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆவது பிரிவின் ஏற்பாடுகள் நிறைவேறுமுகமாக உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | 2019.04.06 திகதி முதல் அங்கீகரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை இணைக்குமாறு மற்றும் அது வரை பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் இந்த அலுவலகத்திற்கு இணைக்குமாறு பல சந்தர்ப்பங்களில் பொது நிர்வாக அமைச்சை கோரியுள்ளேன். | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

4. **மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டாம் தரத்தில் காணப்பட்ட 13 வெற்றிடங்களில் 09 பேடன்ட் பரிசோதகர் பதவியை சேர்ந்ததுடன் அப் பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 10 ஆகும். அதன் படி அங்கீகரிப்பட்ட பதவியணியில் 90 சதவீதம் வெற்றிடமாககக் காணப்பட்டது. அதே போல் இந்தப் பதவிகள் பேடன்ட் பதிவு செய்யும் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புபடுவதனால் அச் செயற்பாடுகளின் தாமதத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய நிலை காணப்படுகின்றது என்பதை தவிர்க்க முடியாதுள்ளது என அவதானிக்கப்பட்டது. | 2020 ஆண்டில் அரச வர்த்தமானியின் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆட்களை சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், நேரிட்டிரந்த கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணத்தினால் எதிர்பார்த்த விதமாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தது.<br>2020 ஆண்டின் போது நடைபெற்ற ஜனாதிபதி ஆலோசனை குழுக் கூட்ட தீர்மானத்தின் படி பேடன்ட் பரிசோதகர்கள் சேர்க்கப்படும் வரை புதிதாக பயிலுனர் இணைக்கப்பட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வழங்கியிருந்த ஆலோசனையின் படி பொது நிர்வாக அமைச்சுச் செயலாளருக்கு மற்றும் கௌரவ பொது நிர்வாக அமைச்சருக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.<br>அவ்வாறு அந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக பகிரங்க சேவை ஆணைக்குழுவிடம் விடயங்களை வினவுவதற்காக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டதுடன் அக் கடிதத்திற்கு பதில் கிடைத்தவுடன் குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு இயலுமாகும். | பேடன்ட் பதிவு செய்யும் செயற்பாடுகளுக்கு நேரடியாக தொடர்பு படுவதனால் ஆட்சேர்ப்பு தாமதிக்கக் கூடாது. |